# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2049 ● செப்டம்பர் 22, 2018

Weekly E-paper ● September 22, 2018

உள்ளே...




**பா.ஜ.க.வின் பண்பாளரைப் பாரீர்!**

மா.உதயகுமார்



**குழந்தைகளுக்குக் கலைஞர் தாத்தா!!**

இரா.உமா



**சாதி ஆணவம் ஒழியட்டும்**

தலையங்கம்



## சங்கீதமும் சங்பரிவாரும்!



## தோழர் சுபவீயின் தொடர் சொற்பொழிவு

சென்னை பெரியார் திடலில் ஒவ்வொரு மாதமும் நான்காவது வியாழக்கிழமை மாலை 06.30 மணிக்குக் "கலைஞரின் நெஞ்சுக்கு நீதி" குறித்து தோழர் சுப.வீரபாண்டியன் தொடர் சொற்பொழிவு ஆற்றவிருக்கிறார். முதல் பொழிவு செப்டம்பர் 27.

# சங்கீதமும் சங்பரிவாரும்!



**வெற்றிச்செல்வன்**

அண்மைக் காலங்களில் இசைத் துறையில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிகழ்வுகள், இந்தியாவில் தனி மனித சுதந்திரம் எந்த அளவுக்கு அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது என்பதை நமக்கு உணர்த்துகின்றன. கர்நாடக இசைக் கலைஞர்கள் மிரட்டப்படுவது, அதனைத் தொடர்ந்து அவர்களது இசை நிகழ்ச்சிகள் ரத்து செய்யப்படுவது என்பதே அது.

கர்நாடக இசைக் கலைஞர் ஓ. எஸ். அருண் கலந்துகொள்ளவிருந்த “இயேசுவின் சங்கம சங்கீதம்” என்ற நிகழ்ச்சி இந்துத்துவவாதிகளால் தொடர்ந்து சமூக வலைத் தளங்களில் மோசமாக விமர்சிக்கப்பட்டது. ஓ. எஸ். அருண் ஓர் இந்து என்றும், அவர் இயேசுவைப் பற்றிய பாடல்களைப் பாடக் கூடாது என்றும், அவரது நிகழ்ச்சிகளை இந்துக்கள் புறக்கணிக்க வேண்டும் என்றும் சமூக வலைதளங்களில் பரப்புரை செய்யப்பட்டது. இதனையடுத்து சொந்தக் காரணங்களை முன்னிட்டு அந்நிகழ்ச்சியில் கலந்து கொள்ள இயலவில்லை என்றார் அவர்.

இந்த சர்ச்சை ஓய்வதற்குள்ளாகவே, பாடகர் நித்யஸ்ரீ மகாதேவன், தியாகராஜ கீர்த்தனைகளில் இராமனுக்குப் பதிலாக இயேசுவைப் பற்றிப் பாடினார் என்ற பொய்யான குற்றச்சாட்டினைக் கூறி அவரை இந்துத்துவவாதிகள் சமூக வலைதளங்களில் கண்டிக்கத் தொடங்கினர். இவர்களுக்குப் பதிலடி கொடுக்கும் வகையில் பாடகர் டி. எம். கிருஷ்ணா “இனி ஒவ்வொரு மாதமும் இஸ்லாமிய, கிறித்தவ பாடல்களைப் பாடுவேன்” என்று அறிவித்தார்.

தற்போது இதுபோன்ற அச்சுறுத்தல்களுக்கு எதிராக பெருமாள் முருகன், ரொமீலா தாப்பர், அருணா ராய் உள்ளிட்ட 175 குடிமைச் சமூக ஆர்வலர்கள் இணைந்து ஓர் அறிவிப்பை வெளியிட்டுள்ளனர். “கலாச்சாரம், பாரம்பரியம் ஆகியவற்றைக் காப்பது என்ற பெயரில், ஒரு சிறு குழு மிரட்டுவது, அச்சுறுத்துவது போன்ற செயல்களில் ஈடுபடுவதை அனுமதிக்க இயலாது. ஜனநாயகத்தையும், கருத்து சுதந்திரத்தையும் பாதுகாக்கும் கடமை உடைய அரசோ, நீதிமன்றமோ இதைத் தடுக்க முன்வராதது அச்சமூட்டுவதாக உள்ளது. கருத்து சுதந்திரத்தை வழங்கும் அரசியல் சாசன உரிமையைப் பாதுகாக்க கலைஞர்கள், சமூக ஆர்வலர்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் முன்வர வேண்டும்” என்பதே அவ்வறிவிப்பு.

**பாரதம் என்னும் இந்த நாட்டில் வாழ்வது, இந்து மக்களே. இது ஒரு இந்து நாடு.**
**– கோல்வால்கர்** (Bunch of Thoughts. பக்கம் 126)

மத்தியில் பா. ஜ. க. அரசு பொறுப்பேற்றதில் இருந்து கருத்து சுதந்திரத்தின் குரல்வளை நெரிக்கப்பட்டு வருவதை நாம் அறிவோம். ஒருவர் எதைப் பேச வேண்டும், எதை உண்ண வேண்டும் என்பதைச் சிலர் முடிவு செய்கின்றனர். ஒற்றைக் கலாச்சாரத்தை நோக்கி நாட்டை உந்தித் தள்ளுவதையே குறிக்கோளாகக் கொண்டு அரசு இயங்குகிறது. இது இந்தியா போன்ற பன்மைக் கலாச்சாரத்தைக் கொண்டுள்ள நாட்டிற்குப் பெருங்கேடாக முடியும். கடந்த வாரம் ஒரு நிகழ்ச்சியில் பேசிய துணைக் குடியரசுத் தலைவர் வெங்கைய நாயுடு, “ஆங்கிலம் ஒரு நோய் என்றும், இந்தி இல்லாது இந்தியா முன்னேறுவது சாத்தியமில்லை என்றும் பேசியுள்ளார். கோல்வால்கரின் வாரிசுகளிடம் நாம் வேறென்ன எதிர்பார்க்க முடியும்? எதிர்வரும் தேர்தலில் இந்தச் சர்வாதிகார அரசை வீட்டுக்கு அனுப்ப அனைத்து ஜனநாயக சக்திகளும் ஒன்றிணைய வேண்டியது காலத்தின் கட்டாயம்.

# பா.ஜ.க. வின் ‘பண்பாளரைப்’ பாரீர்!

மா.உதயகுமார்




மக்கள் தலைவர்கள், அரசியல் கட்சித் தலைவர்கள், கலைஞர்கள், கவிஞர்கள், படைப்பாளிகள், பத்திரிக்கையாளர்கள், மாற்று மதத்தினர், நாத்திகர்கள், காவல் துறையினர், நீதிமன்றங்கள், அரசு அதிகாரிகள் குறிப்பாக அறநிலையத்துறை அதிகாரிகள், அறிவியல் அறிஞர்கள், வரலாற்று ஆசிரியர்கள், ஆய்வாளர்கள், பெண்கள்.

இந்தப் பட்டியலில் ஏதேனும் இன்று விடுபட்டிருக்கலாம். இனி வரும் காலங்களில் ஏதேனும் சேர்க்கப்படலாம். இது ஒரு நீளும் பட்டியல்.

இப்பரந்துபட்ட பட்டியல் போற்றப்படுவதற்காக இங்கு சுட்டிக்காட்டப்படவில்லை. எச்.ராஜா என்கிற ஒருவரால் தொடர்ந்து தூற்றப்பட்டதற்காகச் சுட்டிக்காட்டப் பட்டிருக்கிறது.

பல்வேறு துறைகளைச் சார்ந்தவர்களையும் நாகரிகமின்றி நாவால் தூற்றுவார். நாட்டில் சச்சரவுகளை அரங்கேற்றுவார். நாராசமான வகையில் சுயவிளம்பரம் நாடுவார். அவர்தான் எச்.ராஜா.

வாயைத் திறந்தாலே தகுதி, திறமை, ஒழுங்கு என்று பேசும் கட்சியினரின் தேசியச் செயலாளரின் தரம் இப்படி இருக்கிறது என்றால் அந்தக் கட்சி முன்வைக்கும் தகுதி, திறமை, ஒழுங்கு எல்லாம் எப்படிப்பட்டது என்பதை மக்கள் உணரவேண்டும். இவர்களை உதறித்தள்ள வேண்டும்.

இவ்வளவு அத்துமீறல்களைச் செய்பவர்களோடு தான் இந்த அரசு ஒத்துப்போகிறது. இப்படிப்பட்ட அரசு இருப்பதால் தானே இவர்களும் ஆட்டம் போடுகிறார்கள்.

இவர்மீது வழக்குத் தொடுப்பதென்றால் எத்தனை வழக்குகள் தொடுப்பது, அவற்றை எத்தனைப் பிரிவுகளாகப் பிரிப்பது? ஜெயலலிதாவைப் போலவே இவருக்கும் ஒரு சிறப்பு நீதிமன்றம் தான் அமைக்க வேண்டும் போலிருக்கிறது. அவாளுக்கெல்லாம் நீதிமன்றங்கள் கூட தனியாகத் தேவைப்படுகிறது.

இந்த மக்களுக்கு ‘இந்து’ மதம் பிடிக்கவைத்து, அவர்களை உணர்ச்சிவயப்படவைத்து, மதக்கலவரங்கள், மசூதி இடிப்புகள் என வடநாட்டில் செய்தது போலவே தமிழ்நாட்டிலும் செய்து ஆட்சியமைக்க வேண்டும் என்கிற இலக்கை நோக்கியே அவர்கள் தொடர்ந்து பயணிக்கிறார்கள். இம்முயற்சியில் தமிழ்நாட்டில் பள்ளத்தில் விழுந்திருக்கிறார்கள். அதனால் இதை அவர்கள் இங்கு செய்வது கடிதினும் கடிதுதான்.

ஆனால் இன்று எச்.ராஜா தொட்டிருக்கும் விசயத்தை நாம் அவ்வளவு எளிதாகக் கடந்து விட முடியாது. ஆலய மீட்பு என்கிற பரப்புரையைத் தொடர்ந்து செய்து கொண்டிருக்கின்றனர். இதில் நாம் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். அப்பரப்புரையின் ஒரு பகுதியாகவே இன்று அறநிலையத் துறை அதிகாரிகளை அவர் வழக்கம் போல் நாகரிகமற்றுச் சாடியிருக்கிறார்.

அலுவலகத் தோழி ஒருமுறை வருத்தத்துடன் பகிர்ந்து கொண்டார். அவருடைய அண்ணனின் முதல் மாத ஊதியத்தை அவர்களுடைய பெற்றோர்கள் அப்படியே கோவில் உண்டியலில் போட்டுவிட்டார்களாம். இந்த மக்களை முன்னேறவிடாமல் தடுத்த அதே கோவில்கள் அவர்கள் முன்னேறுகிற போது முதலில் பங்கினைப் பெற்றுக் கொள்கின்றன. இன்னும் இதைத் தெளிவாகச் சொன்னால் பார்ப்பனர்கள் அந்தப் பங்கினைப் பெற்றுக் கொள்கின்றனர். இப்படி மக்களுடைய பணம் எல்லாம் அறியாமையால் ஆண்டவன் பெயரைச் சொல்லி அர்ச்சகனுக்குப் போவதைக் கண்காணிக்க வந்த அறநிலையத் துறையை எப்படியாவது அகற்றியே ஆக வேண்டுமென்று அவாள் ஆலயமீட்புப் போராட்டத்தைக் கையில் எடுத்து எச்.ராஜாவின் மூலமாக அம்புகளைத் தொடுக்கின்றனர்.

இந்துக்களை ஒருங்கிணைக்க அவர்கள் செய்யாத முயற்சி இல்லை. இந்து மகாசபையின் முக்கியத் தலைவர்களில் ஒருவரான பாலகிருஷ்ண சிவராம் மூஞ்சே என்பவர் இந்துக்களை ஒருங்கிணைக்க முசோலினியைச் சந்தித்து ஆலோசனை நடத்தியிருக்கிறார். இங்கு அய்யா பெரியாரைக் கூடச் சந்தித்திருக்கிறார். இந்து மக்களை ஒருங்கிணைக்க RSS வெளியிடும் இதழுக்கு ‘Organizer’(புரட்சியாளர்கள் கையாண்ட சொல்) என்றே பெயர் வைத்திருக்கிறார்கள். காலத்திற்கேற்ற மாற்றங்களை உள்வாங்கிக் கொள்ள வேண்டும் என்று மோகன் பகவத் பேசுகிறார். இந்துக்களை ஒருங்கிணைக்கும் இந்த அரும்பணியின் பயிராக விளைந்தவர் தான் பண்பாளர் எச்.ராஜா.

“இந்து மக்களே ஒன்றுபடுங்கள்” என்று அவர்கள் தொடர்ந்து முழக்கமிடுவது மக்கள் ஒன்றுபட வேண்டும் என்பதற்காக அன்று, மாறாக மக்களை மேலும் சாதிய வேற்றுமைகளோடு பிரித்து வைப்பதற்காக, கோவில் கல்லாப்பெட்டியைக் கைப்பற்றுவதற்காக.

எச்.ராஜாவுக்கு நாம் சொல்ல வேண்டியது ஒன்று உண்டு “யாகாவாராயினும் நாகாக்க” ●

# வினாவும்? விடையும்!

**திராவிட ஆட்சியால், இடைநிலைச் சாதியினர் கண்ட எழுச்சியளவிற்கு, தாழ்த்தப்பட்ட சாதியினர் பெறவில்லை என்ற குற்றச்சாட்டு நீடிக்கிறதே?**

– ஏ.த.மோகன்குமார்
காஞ்சிபுரம்

**சுபவீ விடை**

இந்தியச் சமூகம் ஒரு சாதியச் சமூகம் மட்டுமன்று. அது படிநிலை ஏற்றத்தாழ்வுகளைக் கொண்ட சமூகமும் ஆகும் என்பார் அம்பேத்கர். அது ஒரு தந்திரமான வஞ்சகமான ஏற்பாடு. எனவே, பயன்களையும் மேல்படியில் உள்ளோர் சற்று முன்கூட்டிப் பெற்றிடும் வாய்ப்பு இருக்கவே செய்தது என்பதை மறுப்பதற்கில்லை. அதே வேளையில், திராவிட இயக்கமும், ஆட்சியும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒன்றுமே செய்யவில்லை என்பது அவதூறு. அதில் உண்மையில்லை. அரசுப் பேருந்துகளில் தாழ்த்தப்பட்டோர் பயணம் செய்ய இருந்த தடையை நீக்கியதும், தாழ்த்தப்பட்ட மக்களைக் கோயிலுக்குள் சுயமரியாதை இயக்கம் அழைத்துச் சென்றதும் 1930களுக்கு முன்னால் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. சென்னை உயர்நீதிமன்றத்தில் தாழ்த்தப்பட்ட ஒருவர் (நீதிபதி வரதராஜன்) நீதிபதியாக அமர்த்தப்பட்டது, தலைவர் கலைஞர் முதல்வராக இருந்தபோதுதான். அவர்தான் உச்சநீதிமன்றத்திலும் பிறகு நீதிபதியானார். சாதியில் மட்டுமின்றி, பால் அடிப்படையிலும் இதனை நாம் பொருத்திப் பார்க்கலாம். 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில், பொதுக்கல்வி முறை வந்தது. ஆனால் அந்த வாய்ப்பை ஆண்கள்தானே முதலில் பெற்றார்கள். அரை நூற்றாண்டுக்குப் பிறகுதானே பெண்கள் அந்தக் கல்வி வாய்ப்பைப் பெற முடிந்தது!

ஆசிரியர்
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில். இளங்கோவன்**

ஆசிரியர் குழு
**தமிழ்மறவன்**
**உதயகுமார்**
**வெற்றிச்செல்வன்**

வெளியிடுபவர்
**கோ.தினகரன்**

இணையதளம்
**www.keetru.com**
**www.peravai.com**
**www.peravainoolagam.com**

மின் அஞ்சல்
**karunchattai@gmail.com**

டுவிட்டர்
**suba_vee**

தொடர்புக்கு
**122/130 என்.டி. ராமராவ் தெரு**
**ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்**
**சென்னை - 600 024**

**தொலைபேசி: 044-4204 7162**

## பேரவையில் இணைந்த தோழர்கள்



*16.09.2018 அன்று திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் தலைமை அலுவலகத்தில் தங்களை இணைத்துக் கொண்ட புதிய தோழர்கள், பொதுச்செயலாளர் மற்றும் தோழர்களுடன் .*

## எழுவர் விடுதலை–கருத்தரங்கம்




*18.09.2018 அன்று திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் சார்பாக சென்னை வள்ளுவர் கோட்டம் அருகில் தளபதி ஸ்டாலின் பயிற்சி மையத்தில், பேரறிவாளன் உள்ளிட்ட எழுவரையும் விடுவிக்கக் கோரும் கருத்தரங்கம்.*

## திருச்சி கருத்தரங்கம்




*15.09.2018 அன்று திராவிட இயக்கத் தமிழர் பேரவை சார்பாக திருச்சியில் நடைபெற்ற கருத்தரங்கம்.*

*தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி !*

# கருஞ்சட்டைத் தமிழர்

## சாதி ஆணவம் ஒழியட்டும்



2016ஆம் ஆண்டு திருப்பூர் மாவட்டம் உடுமலைப் பேட்டையில் ஒரு சாதி ஆணவப் படுகொலை நடைபெற்றது. மனைவி கவுசல்யாவின் கண் முன்னால் அவரின் கணவர் சங்கர் வெட்டிக் கொலை செய்யப்பட்டார். கொலை செய்தவர்கள் கவுசல்யாவின் தந்தை, உறவினர்கள்.

கடந்த சில நாள்களுக்கு முன்னர், தெலுங்கானாவில் இதே போன்று ஒரு சாதி ஆணவப்படுகொலை நடைபெற்றிருக்கிறது. ஐந்து மாதங்கள் கருவுற்றிருந்த அம்ருதாவின் கண் முன்னால் அவரின் கணவர் பிரணய் கொடூரமாக வெட்டிக் கொலை செய்யப்பட்டார். கொலை செய்தவர்கள் அம்ருதாவின் தந்தை, உறவினர்கள்.

சாதி மறுப்புத் திருமணங்கள் பெருவாரியாக மக்களால் வரவேற்கப்பட்டுக் கொண்டிருக்கும் இந்தக் காலத்தில் சாதிக்காக, சாதி வெறியோடு படுகொலைகளும் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கிறது.

கடந்த காலங்களை விட இப்பொழுது சாதியைக் கூர்மைப் படுத்துவதும், சாதியின் பெயரால் மதங்களைக் கூர்மை படுத்துவதும் மதங்களின் பெயரால் மக்களைப் பிளவு படுத்துவதும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. ‘ஏக இந்தியா’, ராமர் கோவில் போன்ற மதவாத சக்திகளின் திரை மறைவில் இருந்து சாதியம் மேலும் மேலும் கூர்மையாகிக் கொண்டிருப்பது இது போன்ற சாதி ஆணவப்படுகொலைகளுக்கு அடிப்படையாக அமைகிறது.

இனியும் இதுபோன்ற ஆணவப் படுகொலைகள் தொடரக் கூடாது. இதற்கு எதிரான போராட்டங்களையும், விழிப்புணர்வுகளையும் முன்னெடுக்க வேண்டும். அம்ருதாவைக் கவுசல்யா நேரில் சந்தித்து ஆறுதல் சொல்லி இருக்கிறார். அவர்களே போராட்டத்திற்குத் தலைமை தாங்குவது பொருத்தமாக இருக்கும்.

## தமிழறிஞர் கி.த.பச்சையப்பனார் மறைவு



சிறந்த தமிழறிஞரும், இனமான உணர்வு கொண்டவரும் மொழிக்காகப் போராட்டங்கள் நடத்தியவருமான புலவர் கி.த. பச்சையப்பன் அவர்கள் தன் 85ஆம் வயதில் மறைவெய்தியுள்ளார். அவருக்கு நம் வீரவணக்கம்.

# குழந்தைகளுக்குக் கலைஞர் தாத்தா!!

இரா.உமா

தலைவர் கலைஞரின் இறுதி ஊர்வலம் நடைபெற்ற ஆகஸ்ட் 8ஆம் தேதி, வாட்ஸ் அப்பில் ஒரு வீடியோ காட்சி வலம் வந்தது. ஒரு மூன்று மூன்றரை வயதுடைய சிறு பையன், ஏதோ கேட்டு அடம்பிடித்து அழும் வீடியோ அது. குழந்தை அடம்பிடித்து அழும் வீடியோவில் என்ன இருக்கிறது என இத்தனைபேர் இதனை பகிர்கிறார்கள் என்ற கேள்வியுடன், சத்தத்தைக் கூடுதலாக வைத்து உற்றுக் கேட்டபோது, வியப்பாக இருந்தது. 'கலைஞர் தாத்தா வேணும்' என்று கேட்டபடியே அந்தச் சின்னப் பையன் அழுகிறான். அருகில் இருந்து அவனுடைய பாட்டியோ, அம்மாவோ சமாதானப்படுத்துகின்றனர். இருந்தும் 'கலைஞர் தாத்தா வேணும்' என்று கேட்பதன் ஊடாக, அந்தச் சின்னப்பையனின் அழுகை கூடுகிறதே தவிர குறையவில்லை!



'அம்மா, தாத்தாவுக்கு உடல்நிலை மோசமா இருக்குன்னு சொல்றாங்களே, எனக்கு மனசே சரியில்லமா...என்னால இங்க இருக்க முடியல..நா கௌம்பி வர்றேன்' கோவையில் இயற்பியல் முதுகலை படிக்கும் என் மகள் இலக்கியா கைபேசியில் அழுதபோதும், இரவோடு இரவாகப் புறப்பட்டுச் சென்னைக்கு வந்து சேர்ந்தபோதும், பேச்சற்றுத் திகைத்துப் போனேன்.

1960களில் அவர் மேடைகளில் சிங்கமென முழங்குவதைக் கேட்டவர்கள், முதல்வராக இருந்தாலும், எதிர்க்கட்சித் தலைவராக இருந்தாலும், சட்டமன்றத்தை அவரே வழிநடத்திய பாங்கினைக் கண்டவர்கள், போராட்டக் களமா, பேரிடர் காலமா எதுவானாலும், பொங்கும் இன உணர்வுடனும், ஊற்றெடுக்கும் அன்புடனும் செயல்படும் தீரத்தைப் பார்த்தவர்கள், அவருடைய உழைப்பையும், உயர்வையும், பட்ட விழுப்புண்களையும் பக்கத்தில் இருந்து பார்த்தவர்கள், உடன் பழகியவர்கள், பணியாற்றியவர்கள் அவர் மீது பற்றுக் கொள்வதோ, அவர் மறைவைத் தாங்கிக் கொள்ள முடியாமல் தவிப்பதோ இயல்பானது, புரிந்து கொள்ளக் கூடியது. ஆனால், மூன்று வயது குழந்தையில் இருந்து முதுகலை படிக்கும் கல்லூரி மாணவி வரை கவர்ந்திழுக்க அவரால் எப்படி முடிந்தது?

பொதுவாகவே திராவிட இயக்கத்திற்கு ஒரு கூடுதல் சிறப்பு உண்டு. திராவிட இயக்கம் தனித்த உறுப்பினர்களை மட்டுமல்லாது, குடும்பம் குடும்பமாக உறுப்பினர்களைக் கொண்டது. இயக்கத்தின் கூட்டங்களுக்கும், மாநாடுகளுக்கும் குடும்பம் குடும்பமாகச் சென்று பங்கேற்பது வழக்கம். மாநாட்டுப் பந்தல்களோடும், கூட்ட அரங்குகளோடும் நின்று விடாமல், உறவு முறை சொல்லி அழைத்து உறவு கொண்டாடும் அளவுக்கு, திராவிட இயக்கக் குடும்பங்களுக்கு இடையேயான தொடர்பு தலைமுறை தலைமுறையாக நீடித்து இருக்கும். தந்தை பெரியார், பெரியார் தாத்தாவானதும், நாகம்மையாரும், மணியம்மையாரும் அன்னை நாகம்மையார், அன்னை மணியம்மையாரானதும், இப்போது, தலைவர் கலைஞர், கலைஞர் தாத்தாவானதும் திராவிட இயக்க வாழ்வியலின் நீட்சியே ஆகும். தங்களுக்காகப் பாடுபட்டவர்களை, பேசியவர்களை சொந்தங் கொண்டாடும் சமூக உரிமை இது.

ஆட்சி அதிகாரத்திற்கு வருபவர்களின் பார்வை பெரும்பாலும், நேராக இருக்கும் அல்லது மேல் நோக்கியதாக இருக்கும். தலைவர் கலைஞரின் ஆட்சி அதிகாரப் பார்வை, சமூகத்தின் விளிம்புகள் வரை கூர்மையுடன் நோக்கக்கூடியது. அடித்தட்டு மக்களையும் அன்னையின் அன்புடன் அரவணைத்துக் காக்கக்கூடியது. அந்த அக்கறையும், அதனால் அவர் தீட்டிச் செயல்படுத்திய திட்டங்களும் கருவிலிருக்கும் குழந்தை முதல் கல்லூரி மாணவர்கள் வரை உள்ளடக்கிச் செல்லும். எந்தத் திட்டமானாலும் எதிர்வரும் தலைமுறைகளையும் கவனத்தில் கொண்டதாக இருக்கும்.

இந்த நாட்டில் பார்ப்பனிய ஆதிக்கத்திற்கு எதிராக எழுந்த தென்னிந்திய நல உரிமைச் சங்கம் தொடங்கி அனைத்து இயக்கங்களும், முதன்மையாக வலியுறுத்தியது, நம் மக்களுக்கான கல்வியைத்தான். கறுப்பின தலைவர்களுள் ஒருவரான ஃபிரெட்ரிக் டக்ளஸ் கூறியதைப் போல, "கல்வி மட்டுமே ஒரு மனிதனை சுதந்திர மனிதனாக்கும்". அதனால்தான், ஈராயிரம் ஆண்டுகளுக்கும் மேலாகக் கல்வி மறுக்கப்பட்ட சமூகத்தைக் கல்வியில் மேம்படுத்த திராவிட இயக்கம் போராடியது. இடஒதுக்கீடு என்னும் சமூக நீதியை பெற்றுத்தந்தது. திராவிட முன்னேற்றக்கழகம் அதைக் காப்பாற்றும் அரசியல் அரணாகியது. இடஒதுக்கீடுக்கு ஆபத்து நேரும் போதெல்லாம், தலைவர் கலைஞரின் எழுதுகோல் வாளாகியது. முரசொலி போர் முரசம் கொட்டியது. தங்களுடைய கல்வி உரிமையைக் காத்தவர் கலைஞர் என்பதால், தமிழ்ப்பிள்ளைகளுக்கு அவர் கலைஞர் தாத்தாவானார்!

'நீட் தேர்வு' அரியலூர் அனிதா உள்ளிட்ட பல பிள்ளைகளின் உயிரையும், கனவையும் காவு வாங்கிய மோசடித் தேர்வு. திறமையுள்ள, இலட்சியக் கனவுள்ள நம் பிள்ளைகளின் வாழ்வு இப்படியெல்லாம் சிதைந்து போகக் கூடாது என்று எண்ணியதால்தான், 2007இல் நுழைவுத் தேர்வை ரத்து செய்தார் கலைஞர். எத்தனை ஆயிரம் கிராமப்புறப் பிள்ளைகள், பொறியாளர்களாக, மருத்துவர்களாக உருவாகி வெளியே வந்தார்கள். அந்தப் பிள்ளைகள் தங்கள் நன்றியைச் செலுத்த, கலைஞர் தாத்தாவின் நினைவிடத்திற்கு வந்த வண்ணம் உள்ளனர்!

இந்தித் திணிப்பை 14 வயது முதல் எதிர்த்துப் போராடியவர் கலைஞர். அண்ணாவின் இருமொழிக்கொள்கையை உறுதியுடன் காத்ததால், உலகத் தொடர்பு மொழியான ஆங்கிலத்தில் தேர்ந்து, மென்பொருள் துறைகளில் கோலோச்சும் நிலையை தமிழ்நாடு எய்தியது. அவர் உருவாக்கித் தந்த 'டைடல் பார்க்'கில், குளிரூட்டப்பட்ட கட்டிடங்களில் அமர்ந்து கணினியைத் தட்டிக்கொண்டிருக்கும் பிள்ளைகளில், வரலாறு அறிந்தவர்களுக்கு அவர் கலைஞர் தாத்தாவானார்!

திருப்பத்தூர் பகுதியிலிருந்து வந்த மூன்றாம் வகுப்பு மாணவி, கலைஞரின் நினைவிடத்தில் உருக்கமாகக் கவிதை பாடினார்.அதைப்போல, பள்ளிக்

குழந்தைகளும், கல்லூரி மாணவர்களும் சாரை சாரையாக வந்து, கலைஞரின் திட்டங்களை அழகாக எடுத்துச் சொல்லி மரியாதை செலுத்துவதைப் பார்க்க முடிகிறது. கலைஞரின் முழு பரிமாணத்தையும் அந்தப் பிள்ளைகள் அறிந்திருக்க வாய்ப்பில்லைதான். ஆனாலும், ஒரு நாள் கறிசோறு சாப்பிட, ஆண்டு முழுவதும் தீபாவளிச் சீட்டு கட்ட வேண்டிய நிலையில் உள்ள அந்தப் பிள்ளைகளுக்குத் தெரிந்திருக்கிறது, வாரத்தில் ஆறு முட்டைகளும், வாழைப்பழமும் சத்துணவில் கிடைப்பதற்குக் கலைஞர் தாத்தாதான் காரணம் என்று!.

அருகாமைப் பள்ளிகள் என்னும் இலக்கை இன்னும் நாம் எட்டிவிடவில்லை. எட்டிய பகுதிகளிலும், மூன்று வேளை சோறுபோட்டு, பள்ளி – கல்லூரிகளுக்கு அனுப்பவோ, பிள்ளைகள் கவனம் சிதறாமல் படிப்பதற்கான சூழலை வீட்டில் உருவாக்கித் தரவோ ஒடுக்கப்பட்ட ஏழை எளிய பெற்றோரால் இயலவில்லை. போராடிப் பெற்ற கல்வி, ஏழ்மையால் கிட்டாமல் போகலாமா, போகத்தான் விடுவேனா என்று, ஆண் பிள்ளைகளுக்கும், பெண் பிள்ளைகளுக்கும் தனித்தனியே அரசு மாணவர் விடுதிகளை ஏற்படுத்தித் தந்தார் கலைஞர். அந்த விடுதிகளில் தங்கிப் படித்த கலைஞரின் பேரப்பிள்ளைகள் எத்தனையோ பேர், இன்று உயர் பதவிகளில் இருக்கின்றனர்!

முதுகலைப் பட்டப்படிப்பு வரை கட்டணம் கிடையாது, முதல் தலைமுறையாகக் கல்லூரி வாசலை மிதிக்கத் துடிக்கும் மாணவர்களுக்கு, கட் ஆஃபில் 5 மதிப்பெண் கூடுதல், தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு படிப்பவர்களுக்கு அரசுப் பணிகளில் முன்னுரிமை தர முயற்சி எடுத்தது என பள்ளி, கல்லூரி பிள்ளைகளுக்கு நேரடியாகப் பயன்தரக் கூடிய திட்டங்கள் மட்டுமின்றி, அவர்களின் எதிர்காலத்திற்கும் சேர்த்து திட்டங்கள் தீட்டியவர் கலைஞர்.

போட்டி நிறைந்த இன்றைய உலகில், பாடத்திட்டத்தையும் தாண்டி, அறிவை விரிவு செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. பாடப்புத்தகங்களை அரசு கொடுக்கும். உலக அறிவைத் தரக்கூடிய புத்தகங்களுக்கு எங்கு செல்வார்கள் என் பிள்ளைகள் என்று, அந்தத் தலைவர் சிந்தித்ததன் செயல்வடிவமே, கோட்டூர்புரம் அண்ணா நூற்றாண்டு நினைவு நூலகம்!. எட்டு ரூபாய் எண் சுவடி (வாய்ப்பாடு) புத்தகம் முதல் ஏழைகளுக்கு எட்டாத ஆராய்ச்சிப் புத்தகங்கள் வரை அங்கே கொண்டு வந்து சேர்த்திருக்கிறார். அந்தப் பிள்ளைகள் சொந்தப் புத்தகங்களையும் கொண்டு வந்து படிக்கவும் ஏற்பாடு செய்திருக்கிறார் என்றால், அவருடைய உள்ளம், பள்ளத்தில் இருப்பவர்களைக் கைதூக்கிவிட எத்தனை நுணுக்கமாகத் துடித்திருக்கிறது பாருங்கள். உலகத் தரம் வாய்ந்த இந்த நூலகத்தைப் பயன்படுத்தும் பிள்ளைகள், கலைஞர் தாத்தாவை நினைக்காமல் இருக்க முடியுமா?


சந்தனக் கட்டையை எந்தப் பக்கம் தேய்த்தாலும் மணக்கும். தமிழ் நாட்டுப் பிள்ளைகளுடைய வாழ்வின் ஒவ்வொரு பக்கத்திலும், வளர்ச்சியின் ஒவ்வொரு கட்டத்திலும், தலைவர் கலைஞரின் உழைப்பும், திட்டமும் பதிந்து கிடக்கும். குடும்ப அட்டையில் பெயர் இல்லையே தவிர, ஒவ்வொரு குடும்பத்திலும் அவர்தான் மூத்த உறுப்பினர். உயிரினும் மேலான தங்கள் தலைவரை, குழந்தைகளுக்குத் தாத்தா என அறிமுகப்படுத்தி வளர்த்ததாலே, இன்று நாடு முழுவதும் லட்சக்கணக்கான பேரப்பிள்ளைகள், கலைஞர் தாத்தாவை நினைவு கூர்ந்து மரியாதை செலுத்துகின்றனர்.

தமிழக மக்களின் உள்ளமறியா உன்மத்தர்கள் சிலர், அண்ணாவும், கலைஞரும் விதைக்கப்பட்டுள்ள மெரினா கடற்கரையை, திராவிடச் சுடுகாடு என்கின்றனர். பச்சிளம் குழந்தைகளை தலைவர் கலைஞரின் நினைவிடத்தில் கொண்டு வந்து போட்டு, “இதோ பார் என் செல்லமே! உலகமே போற்றும் உன்னதத் தலைவர் இங்கே ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறார். அவரைப் போல நீயும், உன் இனம், மொழி காக்கும் ஓய்வறியாப் போராளியாக வரவேண்டும் தங்கமே” என்று தாலாட்டாய்ச் சொல்லி எடுத்துச் செல்கிறார்கள் என்பது அவர்களுக்குத் தெரியுமா? அந்தக் காட்சி எப்படி இருக்கிறது தெரியுமா? ஆரியத்திற்குக் கோடரியாகவும், திராவிட இனத்திற்குக் கோடரிக்காம்பாகவும் ஆகிப்போன மூடர்களே, சுடுகாடு இல்லையடா, ‘எங்கள் குழந்தைகளின் தொட்டிலடா’ இது என்று சொல்லாமல் சொல்வது போல் இருக்கிறது.

இப்போதுள்ள தலைமுறைக்குத் திமுகவை பிடிக்கவில்லை. கலைஞரைப் பிடிக்கவில்லை என்றெல்லாம் சரடு விட்டுத் திரிபவர்களே, இந்தத் தலைமுறைக்கு மட்டுமன்று, தமிழர்களின் தலைமுறை தலைமுறைக்கும் கலைஞர்தான் காப்பு. தமிழ்நாட்டுக்கும், தமிழர்கள் வீட்டுக்கும் அவர்தான் தலைவர், திமுகதான் காவல் அரண். இந்த உண்மையைத் தெரிந்து கொள்ளவேண்டும் என்றால், கலைஞரின் நினைவிடத்திற்கு வந்து, ஓர் ஓரமாக நின்று பாருங்கள். சீருடை அணிந்த சீரணியாளர்களாக வரும் அவருடைய பேரப்பிள்ளைகள், தங்கள் உள்ளம் கவர்ந்த கலைஞர் தாத்தாவுக்கு இருகரம் கூப்பி நன்றி நவிலும் கண்கொள்ளாக் காட்சியை. (அச்சப்படாதீர்கள், நீங்கள் வந்து போனதற்காக அங்கே தீட்டுக் கழிக்கப்படாது.)

“ஒருவர் எத்தனை ஆண்டுகள் வாழ்கிறார் என்பதை, அவர் இறந்துபோன நாளில் இருந்து கணக்கிட்டுத் தெரிந்து கொள்ளலாம்” என்று அவரேதான் சொன்னார். அந்தக் கணக்கையும் அவர்தான் தொடங்கி வைத்திருக்கிறார். கலைஞர் தாத்தாவுக்கு பேரப்பிள்ளைகளின் நினைவஞ்சலி தொடரட்டும்!

●



# எதிர்வினை



ஈழப் போர் மற்றும் எழுவர் விடுதலை போன்ற பிரச்சனைகளைப் பொறுத்தவரை மக்கள் இன்னமும் கூட உண்மை அறியாதவர்களாகவும் குழப்ப நிலையில் உள்ளவர்களாகத்தான் இருக்கின்றனர். இதைப் பயன்படுத்தி பிஜேபி, அதிமுக மற்றும் தமிழ்த் தேசியவாதிகள் என்று தங்களை அழைத்துக் கொள்வோர் அனைவரும் திமுக மற்றும் திராவிட இயக்கங்களின் மீது தவறான கருத்துகளைப் பரப்பி வருகின்றனர். குறிப்பாக இணையத்தில் இந்தப் பரப்புரை மிகவும் அதிகமாகவே இருக்கிறது. இதற்கு எதிராக விரிவான விளக்கமான கட்டுரைகளும் மக்கள் மத்தியில் பேராசிரியர் சுபவீ போன்றோரின் பரப்புரைகளும் பெருமளவில் தேவைப்படுகிறது.

*- மிரத், பெரியபாளையம்.*



சென்ற வாரக் கருஞ்சட்டைத் தமிழரில் நான் மிகவும் ரசித்தது, சுபவீ அவர்கள் எம்.எஸ்.ஸ்ரீனிவாசன் என்பவரைப் பற்றிச் செய்திருந்த பதிவு. அந்த நிகழ்வு அவர் மனிதனை மனிதனாகப் பார்க்கும் தன்மையைக் காட்டுகிறது. பார்ப்பனர்கள் நம் எதிரி அல்ல, பார்ப்பனீயமே நமது எதிரி என்பதை நாம் இதிலிருந்து உணர்ந்து கொள்ளலாம்.

*- பிரபு, நாகர்கோவில்*



"வெளுக்கும் சாயம்" என்ற தலைப்பில் கார்ப்பரேட்டுகளின் கைப்பாவையாக மோடி அரசு எப்படி செயல்படுகிறது என்பதை தோலுரித்துக்காட்டிய வெற்றிச்செல்வன் கட்டுரை ஒரு சவுக்கடி. தொடர்ந்து மோடி அரசின் முகத்திரையையும் கிழிக்க வேண்டும்.

*- பாலா, சென்னை*

Publisher G.Dinakaran. Editor Suba. Veerapandian, General Secretary, Dravida Iyyakka Tamilar Peravai.